# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## திருத்தம்

இல. 2,285 – 2022, யூன் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை – 2022.06.17

## குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் 1 உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2014 (2022)

இல. 2,285 மற்றும் 2022, யூன் மாதம் 17 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் தரம் 1 உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை – 2014 (2022) எனும் பரீட்சை அறிவித்தலில் 10 இல் பரீட்சைத் திட்டத்தின் கீழ் உள்ள 2 இல் பரீட்சை பற்றிய விபரங்கள் அடங்கிய அட்டவணையில் பாட இலக்கம் 02 இல் பாடத்தின் பெயர், ஏற்புடைய வர்த்தமானி அறிவித்தலில் 12 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு உள்ள அதிகாரத்தின் பிரகாரம் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.

10.

02. **பரீட்சை பற்றிய விபரம்**

| பாட இலக்கம் | பாடம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 02 | தாபன விதிக்கோவை, நடைமுறை விதிகள் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் | 02 மணித்தியாலங்கள் | 100 | 40% |

02. அந்த வர்த்தமானி அறிவித்தலின் ஏனைய ஏற்பாடுகள் மாற்றமின்றி அவ்வாறே செயல்வலுப்பெறும்.

ஐ. எஸ். எச். ஜே. இலுக்பிட்டிய,
குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகம்,
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,
சுஹுருபாய,
பத்தரமுல்லை,
2023, ஓகத்து 14.

09-31

---

## இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் மொரட்டுவை

## கல்வி அமைச்சு

திறன்கள் அபிவிருத்தி, தொழில்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவு

### தேசிய தொழில் பயிலுநர் திட்டத்தின் கீழ் முழுநேர பயிற்சி நெறிக்கான அனுமதி - 2023

கீழ்க்காணும் ஆகக்குறைந்த தகைமைகளையுடைய ஆண்/ பெண் இருபாலாரிடமிருந்தும் 2023 ஆம் ஆண்டு அனுமதிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

